# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 29.03.2018

- இந்தியாவின் முதல் பூச்சி அருங்காட்சியகம் கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம் தேவாரம் அருகே பொட்டிபுரம் கிராமத்தில் உள்ள அம்பரப்பர் மலையில் நியூட்ரினோ திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் அனுமதி அளித்து உள்ளது.
- சுற்றுப்புற மாசுபாட்டினை குறைக்கும் வகையிலான மின்சார பேருந்துகளை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தும் பொருட்டு, இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் C-40 என்ற முகமைக்கும் தமிழக அரசு போக்குவரத்துத் துறைக்கும் இடையே அறிக்கை கையெழுத்தலாகியுள்ளது.
- தமிழ் மருத்துவம் தொடர்பான சிறப்பு நூலகம் மற்றும் பிரத்யே காட்சிக் கூட்டம் தமிழக அரசால் திருநெல்வேலியில் அமைக்கப்பட உள்ளது.
- கூகுள் வரைபடத்தில் இணைகிறது நீலகிரிமலை ரயில். 2005-ம் ஆண்டில் UNESCO-வால் பாரம்பரிய அந்தஸ்து பெற்றது. தற்போது Google Map தளத்தில் இடம் பெற்றுள்ளது.
- தேசிய வருடாந்திர கிராம சுகாதார கணக்கெடுப்பு 2017-2018 (National Annual Rural Sanitation Survey) முடிவில், இந்திய கிராமங்களிலுள்ள 77%, வீடுகளில் கழிப்பறை இருப்பதாகவும், 93% கழிப்பறைகள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.
- மின் சார உற்பத்தியல் உளகளவில், இந்தியா மூன்றாவது நாடாக உருவாகியுள்ளது. முதல் ஐந்து இடங்களில் இருக்கும் நாடுகள் முறையே சீனா, அமெரிக்கா, இந்தியா, ரஷியா மற்றும் ஜப்பான் ஆகும்.
- ஆசியாவின் மிகப்பெரிய அல்லிப்பூ தோட்டமான (Tulip Garden) ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் அமைந்துள்ள ‘இந்திராகாந்தி நினைவு துலிப் தோட்டம்’ (Indira Gandhi Memorial Tulip Garden) பொது மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டுள்ளது.
- மலைவாழ் மக்களில் அதிக அளவில் சீரான குடிநீர் வினியோகம் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையில் மத்திய பிரதேசம் முதலிடத்திலும் ஒடிசா இரண்டாமிடத்திலும் உள்ளதாக மத்திய குடிநீர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- (E-Tribes) A - டிரைப்ஸ் இந்தியா’ திட்டத்தை மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.ஜீவல் ஓரம் புது தில்லியில் துவக்கி வைத்துள்ளார்.
- (Cool EMS Service) ‘கூல் இ.எம்.எஸ். சேவை’ என்னும் பெயரில் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையே புதிய அஞ்சல் துறையின் மூலமாக இறக்குமதி சேவையை இந்திய அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மொமைபல் இணைய வேகத்தில் உலகளவில் 109-வது இடத்தையும் (22.16 mbps) பிராட்பேண்ட் இணைய வேகத்தில் 67வது இடத்தையும் 42.72 mbps இந்தியா பெற்றுள்ளது.